[திரு. விருகை V.N. ரவி] [*2018 மார்ச் 21*

நூற்றாண்டு விழா நடத்தி, தமிழ்நாட்டிற்கே பெருமை சேர்த்து, அம்மாவின் நல்லாட்சி நடத்திவரும் தமிழக மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாகத் திகழும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன். பணிவின் உறைவிடமாய் இருக்கும் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். நீதி தவறாத நடுநிலையோடு நடந்துவரும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களை வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2016-2018 ஆம் ஆண்டுகளுக்கான பொது நிறுவனங்கள் குழுவின் 35 முதல் 62 வரையிலான 28 அறிக்கைகளை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன். மேற்படி அறிக்கைகளை அச்சிட போதிய அவகாசம் இன்மையால், அச்சிட்ட பிரதிகளுக்குப் பதிலாக, படியெடுத்த பிரதிகள் அளிக்கப்பட்டுள்ளன. இவ்வறிக்கைகளின் பிரதிகள் சட்டமன்ற நூலகத்தில் மாண்புமிகு உறுப்பினர்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன. அச்சிட்ட பிரதிகள் கிடைத்தவுடன் அவை, பேரவை உறுப்பினர்களுக்குத் தனியாக அனுப்பி வைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) அரசு உறுதிமொழிக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ராஜா, அரசு உறுதிமொழிக் குழுவின் தலைவர் அவர்கள்.*

திரு. சி. ராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு வணக்கம். மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியை சிறப்பாக நடத்திவரும் உழவராய் பிறந்து முதல்வராய் உயர்ந்த குடிமராமத்து மன்னன், எங்களது அண்ணன், எனது அரசியல் ஆசான் மாண்புமிகு முதல்வர் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு துணை முதல்வர் அவர்களையும் வணங்குகிறேன்.*

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2016-2018 ஆம் ஆண்டுகளுக்கான அரசு உறுதிமொழிக் குழுவின் ஐந்தாவது முதல் பத்தாவது வரையிலான 6 அறிக்கைகளை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன். நன்றி.